செயலட்டை 28

பாடம்:- வணிகக்கல்வி

தரம்:13

தயாரிப்பு:- S. A. S. டிலக்சனி (BBA)
இ/ ஸ்ரீ கிருஷ்ணா மகா வித்தியாலயம்

வாரம் 01
01.11.2021 -07.11.2021

## மாதிரி வினாக்கள்

1. பொறுப்பேற்றல் சந்தர்ப்பத்தை உருவாக்க பெறுமதியை அதிகரித்தல் கண்டுபிடிப்புகள் என்பவற்றுடன் தொடர்புடைய பதம் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
2. இலங்கையில் சிறிய நடுத்தர அளவு முயற்சிகளை இனம் காட்டும் மூன்று பிரதான அளவீட்டு காரணிகள் யாவை?
3. சிறு வணிகங்களின் ஆரம்பிக்கும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய ஆறு விடயங்களை குறிப்பிடுக.
4. முயற்சியாண்மையின் 6p உற்பத்தி செயற்பாடுகளும் எவை?
5. பண்டமாற்று தொடக்கம் இன்றுவரை பணப் பயன்பாடு தொடர்பில் ஏற்பட்ட முறையான வளர்ச்சிப் போக்கின் ஆறு படிகளையும் குறிப்பிடுக.
6. இலங்கையின் நாணயத் தாள்களின் இருவரது கையொப்பங்களை காண முடியும். அவ்வாறு கையொப்பமிடும் இருவரது பதவி பெயர்களை குறிப்பிடுக.
7. அலகு பொறுப்பாட்சி நிறுவன அமைப்பின் நான்கு பிரிவினரும் யாவர்?
8. முயற்சியாண்மை செயற்பாட்டின் பிரதான சந்தர்ப்பங்களை பெயரிடுக.

9. தனித்தனியாக இயங்கி வந்த நிறுவனங்கள் தமது செயற்பாட்டினை முடிவுக்கு கொண்டுவந்து அவற்றுக்கு பதிலாக புதிய நிறுவனம் ஒன்றை ஆரம்பித்தல் எப்பெயர் கொண்டு அழைக்கப்படும்?

10. ஒரு நிறுவனம் மற்றைய நிறுவனத்தின் பெரும்பகுதியை கொள்வனவு செய்வதன் மூலம் அந்நிறுவனத்தை தனதாக்குவதன் மூலம் உருவாக்கும் சேர்க்கை எப்பெயர் கொண்டு அழைக்கப்படும்?